# ரோல்ஸ் - ராய்ஸ் மோட்டார் கார்ஸ்
ஊடகத் தகவல்

## ரோல்ஸ்-ராய்ஸ் டான் (DAWN) - சமரசங்கள் அற்ற டிராப்ஹெட் சொகுசு

8 செப்டம்பர் 2015, குட்வுட்

*"முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, எங்களது புதிய ரோல்ஸ்-ராய்ஸ் டான், ஒரு அற்புதமான, கவர்ந்திழுக்கும் மாடலாகவும் மற்றும் புதிய தலைமுறை ஓப்பன்-டாப், சூப்பர்-லக்சுரி மோட்டாரிங்கின் உதயமாகவும் திகழ்கிறது. உலகின் மிகச்சிறந்த ஓப்பன்-டாப் மோட்டாரிங் ஆனுபவத்தை வழங்கத்தக்க, சமரசங்கள் அற்ற அழகானதொரு புதிய மோட்டார் கார் டான் (Dawn) ஆகும். உலகின் மிக பிரத்தியேகமான சமூக ஹாட்ஸ்பாட்களில், சூரிய ஒளியில் குளிக்க விரும்புபவர்களுக்கான சூப்பர்-லக்சுரி டிராப்ஹெட் மோட்டார் காராக இது திகழ்கிறது.*

*எளிமையாகக் கூற வேண்டுமெனில், இதுநாள் வரை ரோல்ஸ்-ராய்ஸ் உருவாக்கியதிலேயே மிக செக்ஸியான கார் இதுவே ஆகும்.*

*ஒவ்வொரு புதிய நாளும் கொண்டிருக்கும் புத்தம் புதிய வாய்ப்புகளை வெளிப்படுத்தும் கையில், இதன் "டான்" என்னும் பெயர் திகழ்கிறது. இது ஒரு விழித்தெழுதலாகவும், உணர்வுகளின் துவக்க நிலையாகவும் மற்றும் அளப்பறிய பிரகாசமாகவும் திகழ்கிறது. இது ஒரு வெள்ளோட்டம், ஆரம்பகட்டம், எதிர்நோக்கு நிலை, மிகப்பெரிய இருட்டிற்குப் பிறகு உலகில் வெளிவரும் பேரண்டப் பிரகாசம். டான் - ன் காலை நேரப் புத்துணர்ச்சி நாளின் துவக்கத்திற்கு ஒரு உத்வேகத்தையும், பேரார்வத்தையும் உண்டாக்கும்.*

*எலினார் தார்ன்டன் அவர்களது கருத்தைப் போல், பேரின்ப உத்வேகத்தின் பின்புலமாகவும், உரிமையாளருக்கு நாளின் துவக்கத்தில் எதையும் சாதிக்கும் நம்பிக்கையையும் இநத் ரோல்ஸ்-ராய்ஸ் டான் சாத்தியமாக்கும்."*

**ரோல்ஸ்-ராய்ஸ் மோட்டார் கார்ஸ், தலைமை செயல் அலுவலர், டார்ஸ்டென் முல்லர்-ஓட்வோஸ்.**

**அறிமுகம்**

**"...ஏறக்குறைய சரியானது அல்லது இந்த அளவிற்கு போதும் என எதையும் ஏற்ற வேண்டாம்."**

ரோல்ஸ்-ராய்ஸ் - ன் அகராதியில் சமரசம் என்ற வார்த்தை கிடையாது. மாற்றாக, நிறுவனம் தொடர்ந்து அதன் துணை நிறுவனரான சர் ஹென்சி ராய்ஸ் அவர்களது கருத்தாக்கமான, "நீங்கள் செய்யும் அனைத்திலும் சிறந்ததை அடையத் துடிக்க வேண்டும். மிகச்சிறந்தவற்றை எடுத்துக்கொண்டு அதை மேம்படுத்த வேண்டும். அவ்வாறு ஒன்று இல்லை எனில், அதை வடிவமைக்க வேண்டும். ஏறக்குறைய சரியானது அல்லது இந்த அளவிற்கு போதும் என எதையும் ஏற்கக்கூடாது"

இக்கருத்தாக்கத்தின் முதல் பகுதியான – "நீங்கள் செய்யும் அனைத்திலும் சிறந்ததை அடையத் துடிக்க வேண்டும்" – என்பது, நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகளிலும், குறிப்பாக புதிய மோட்டார் கார் வடிவாக்கத்தில் முக்கிய பங்கினைக் கொண்டுள்ளது. இரண்டாவது – "மிகச்சிறந்தவற்றை எடுத்துக் கொண்டு, அதை மேம்படுத்த வேண்டும்" –

என்பது, ∴பேண்டம் சிரீஸ் - II மற்றும் கோஸ்ட் சிரீஸ் - II ஆகிய இரண்டையும் முறையே 2012 மற்றும் 2014 ஆண்டுகளில் கவனமாக அப்டேட் செய்யப்பட்டதில் முக்கிய பங்கிளைக் கொண்டுள்ளது. ரோல்ஸ்-ராய்ஸ் அசல் ஜெண்டில்மேனின் கிரான் டுரிஸ்மோ உலகிற்கு மீண்டும் வரவேண்டும் என்று முடிவெடுத்ததில் முக்கிய பங்கினை வகிப்பது, அக்கருத்தாக்கத்தின் மூன்றாம் பகுதியான, “அவ்வாறு ஒன்று இல்லை எனில், அதை வடிவமைக்க வேண்டும்” என்பதே ஆகும். இதவே ரெய்த் - ன் பிறப்பிற்கும் வழிவகுத்தது.

புதிய தலைமுறை ஓப்பன்-டாப், சூப்பர்-லக்சுரி மோட்டாரிங்கை துவங்க ரோல்ஸ்-ராய்ஸ் வடிவமைப்பு மற்றும் பொறியியல் குழு துவங்கிய போது, அக்கருத்தாக்கத்தின் இறுதிப்பகுதியே உதவியது. ஆட்டோமோட்டிவ் அமைப்புகளின் மிகப்பெரிய சமரசமாக 2+2 இருக்கை அமைப்புகள் அதிகம் கொண்டதொரு தொழில்துறையில், ரோல்ஸ் ராய்ஸ் தேர்ந்தெடுத்தது, “ஏறக்குறைய சரியானது அல்லது இந்த அளவிற்கு போதும் என எதையும் ஏற்கக்கூடாது” என்பதையே.

இதன் பிறகே, புதிய ரோல்ஸ்-ராய்ஸ் டான், உலகின் ஒரே நவீன ∴போர் சீட்டர் சூப்பர்-லக்சுரி டிராப் ஹெட் பிறந்த கதையாகும்.

**“உதயத்திற்கு முன்பாக இருட்டு அதிக வீரியமானதாகவே இருக்கும்”**

ஆங்கில மீட்சி அறவுரையாளர் தாமஸ் ∴புல்லர் அவர்களின் கருத்தான, “உதயத்திற்கு முன்பாக இருட்டு அதிக வீரியமானதாகவே இருக்கும்” என்பதை நம்பிக்கையை சுடர்விடச்செய்யும் முக்கியமானதொரு கருத்தாக்கும். ∴பேண்டம்கள், கோஸ்ட்கள் அல்லது ரெய்த்கள் போன்ற பிசாசுகளின் இத்தகைய அதிகாலை இருட்டைக் கிழித்து, துடிப்பூட்டும் அதிகாலை சூரிய ஒளியைப் போல், புதிய உதயத்தைப் போல், மட்டற்ற சாத்தியங்களைக் கொண்ட நாளைத் துவக்கச்செய்வது, புதிய டான் ஆகும்.

மிகுதியான போர்களுக்குப் பிறகு, 1952 – ம் ஆண்டு, பொருளாதார வீழ்ச்சிகளிலிருந்து மீட்சியடைந்த போது அத்தகைய உணர்வே இருந்தது. அந்த ஆண்டு, உலகனின் முதல் பயணிகள் விமானமான, பிரிட்டிஷ் நாட்டின் டிஹவிலாந்து, காமெட் அதன் முதல் பயணிகள் விமான போக்குவரத்தை துவக்கியது. உலக உருவாக்கத்திற்கு காரணமாக பெரு வெடிப்பு கோட்பாடு வெளியிடப்பட்டது மற்றும் மகாராணி இரண்டாம் எலிசபெத் அரியணை ஏறினார்.

அதே ஆண்டு, வடிவமைப்பாளர்களை ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்த்திய அசல் ரோல்ஸ்-ராய்ஸ் சில்வர் டான் டிராப்ஹெட், ரோல்ஸ்-ராய்ஸ் கோச் கட்டுமான நிபுணர்களான பார்க் வார்ட்டால் கட்டமைக்கப்பட்டு, அதன் முதல் வாடிக்கையாளரான கனடாவைச் சேர்ந்த கலோனெல் W.A.∴பிலிப்ஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அந்த நேரத்தில் ரோல்ஸ்-ராய்ஸ் - க்கு ஒரு புதிய உதயமாக, ஒரிஜினல் சில்வர் டான், தொழிலகத்தில் கட்டமைக்கப்பட்ட பாடி கொண்ட முதல் ரோல்ஸ்-ராய்ஸாகத் திகழ்ந்தது. எனினும், இந்த டிராப்ஹெட் ரோல்ஸ்-ராய்ஸ்கள் சில்வர் டான் பெயரில், தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்காக கோச்-கட்டமைக்கப்பட்டது, அதன் தனித்துவத்தையும் மற்றும் அரிதான தன்மையையும் உறுதிசெய்தது மற்றும் மீண்டும் வாழ்வை அனுபவிக்கத்துவங்கிய அக்காலகட்டத்தின் பதிவாக, லா டோல்ஸ் விடா (இனிய வாழ்க்கையை) சாத்தியமாக்கியது.

பிரபலமான மற்றும் அரிதான ரோல்ஸ்-ராய்ஸ் பெயர், 1950 முதல் 1954 வரை மிகச்சிறப்பாகவும் மற்றும் அரிதாகவும் வெறும் 28 கார்களில் மாத்திரம் பொறிக்கப்பட்டது.

ரோல்ஸ் - ராய்ஸின் புதிய டான், சில்வர் டானின் வடிவமைப்பைக் கொண்டுள்ள நிலையில், 2015 – ம் ஆண்டில், ஒரு சூப்பர் லக்சுரி ∴போர் சீட்டர் கன்வெர்ட்டிபிள் மோட்டார் எவ்வாறு அரிதாகவும் மற்றும் சீரமைக்கப்பட்டும் மற்றும் சமூகத்தில் புழங்கத்தக்கதொரு சூப்பர்-லக்சுரி

காராகவும் திகழ்வேண்டும் என்பதற்கு உதாரணமாக, கூலானதாகவும், நவீன படைப்பாகவும் திகழ்கிறது.

1952 – ம் ஆண்டின் சில்வர் டான் டிராப்ஹெட் போல், புதிய ரோல்ஸ்-ராய்ஸ் டான், அதன் மற்ற சகாக்களிலிருந்து முற்றிலுமாக வேறுபட்ட, 80 சதவிகிதம் தனித்துவமிக்க பாடி பேணல்களைக் கொண்டுள்ளது.

சூப்பர்-லக்சுரி மோட்டாரிங் என்னும் உத்திரவாதத்தை உறுதி செய்யும் வகையில், அத்தகையதாரு கவனம், இப்புதிய டான் உருவாக்கத்தில் மேற்கொள்ளப்பட்டு, சாலைகளில் இணைக்கும் டயர்களும், ஒவ்வொரு ரோல்ஸ்-ராய்ஸ் மாடலும் வழங்கும் மந்திரக் கம்பளம் உணர்வை வழங்கும் வகையில் தனித்துவமிக்கதாக, ரோல்ஸ்-ராய்ஸ் இருப்பிடமான குட்வுட்டிலிருந்து வெளிவருகிறது.

மற்றும், டானின் மேற்கூரை உருவாக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட பொறியியல் மற்றும் உற்பத்தி கவனம் இதுவரை யாரும் அறியாததாகும். நவீன மோட்டார் தொழில்துறையில் இது வரை எவரும் கேள்விப்படாத வகையில், ரோல்ஸ்-ராய்ஸ் டான் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் ரெய்த் - ன் அமைதியையும் மற்றும் மணிக்கு 50 கிலோமீட்டர் வேகத்திலும் வெறும் 20 வினாடிகளில் கனத்த அமைதியுடன் மூடும் தன்மையையும் கொண்டுள்ளது.

இதனால், புதிய ரோல்ஸ்-ராய்ஸ் டான், இது வரை உலகில் உருவாக்கப்பட்டதிலேயே மிகவும் அமைதியான ஓப்பன் டாப் கார் என தைரியமாகக் கூறலாம்.

**வடிவமைப்பு**

**2+2 ≠ 4**

*“ரோல்ஸ்-ராய்ஸ் - ன் அன்றாட உலகில், கணக்கு சட்டங்கள் எல்லா நேரங்களிலும் அமலாகாது. இதனால்தான், ரோல்ஸ்-ராய்ஸ் டானில், 2+2 இங்கு 4 அல்ல என நாங்கள் கூறுகிறோம்”*

**ரோல்ஸ்-ராய்ஸ் மோட்டார் கார்ஸ், வடிவமைப்பு இயக்குனர், கைல்ஸ் டெய்லர் அவர்கள்.**

ஓப்பன்-டாப் மோட்டார் கார் பிரிவை ஆய்வு செய்கையில், குறிப்பாக அதன் உயர் மதிப்பு சொகுச நிலையை கருத்தில் கொள்கையில், வாடிக்கையாளர்களுக்கு குறுகிய மாற்றங்களே கிடைக்கப்பெறுவதை ரோல்ஸ்-ராய்ஸ் வடிவமைப்பு பொறியியலாளர்கள் கண்டறிந்தனர். அனைத்து கூர்நோக்கமும் குறிப்பிட்டதொரு அமைப்பின் மீதே, அதாவது 2+2 அமைப்பின் மீதே இருந்தது, ரோல்ஸ்-ராய்ஸைப் பொறுத்தவரை அபரிமிதமான சமரசமாகத் திகழ்ந்தது.

பொதுவான, 2+2 அமைப்பு என்பது, ஓட்டுனர் மற்றும் முன்பக்க பயணி மற்றும் இரண்டு பின்பக்க சிறிய இருக்கைகள் அவ்வப்பொழுது பயணம் செய்யும் நபர்கள் அல்லது குழந்தைகளுக்கானதாக உள்ளது. நீளவாக்கில், பின்பக்கம் லெக்ரூம் மிகவும் குறைவான இருப்பது, காரின் சொகுசு நிலை மற்றும் செயல்முறைத்தன்மைகளை வெகுவாக மட்டுப்படுத்துவதாக திகழ்கிறது. கன்வெர்டபிள் பாடி வகைகளில், இது இன்னும் அதிக மோசமாக திகழும் வகையில், உற்பத்தியாளர்களால் கன்வெர்டிபிள் கூரையை பின்புறம் பூட்டின் ஒருங்கிணைந்து பின்பக்க பயணிகளுக்கான இடவசதியை வெகுவாகக் குறைக்கும் முறையே பின்பற்றப்பட்டு வருகிறது. இவற்றால், ஓப்பன்-டாப் கார்கள் நிறைந்த தொழில்துறையின் ரோல்ஸ்-ராயஸ் இதை சமரசமாகவும் மற்றும் ‘சமூகத்திற்கு – எதிரானதாகவும்’ கருதியது.

“ரோல்ஸ்-ராய்ஸ் - ல் நாங்கள் சிறப்பான மோட்டார் கார்கள் உற்பத்தியாளராகவும் மற்றும் அவற்றை சமூக ரீதியிலான இடவசதி மிக்கதாக வடிவமைப்பவர்களாகவும் பெருமை கொள்கிறோம்” என்று கூறுகிறார், டெய்லர் அவர்கள். “டான் போன்றதொரு காரை உருவாக்கும்


The Drive, Westhampnett, Chichester, West Sussex PO18 0SH
Telephone +44 (0)1243 384000
www.press.rolls-roycemotorcars.com

எண்ணத்தில், இரண்டு பெரியவர்கள் மாத்திரம் சொகுசாக பயணிப்பது அர்த்தமற்றதாகப் பட்டது. நான்கு பெரியவர்கள் ஒன்றாகவும் மற்றும் சொகுசாகவும் பயணிக்கும் வகையிலான காரை உருவாக்க நாங்கள் முடிவெடுத்தோம்" என்று அவர் மேலும் கூறினார்.

**ஒரு துடிப்பான மற்றும் கவர்ந்திழுக்கும் தன்மை**

*"நெப்போலியின் வழித்தடத்தில், முழுமையாகத் திகழும் வகையில், டான் ஒரு ரோல்ஸ்-ராய்ஸ் ஆகும். Côte d'Azur நவீன வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறு இது திகழ்கிறது. "கசினோ" வாழ்க்கை முறையின் நவீன அம்சத்தையும் இது கொண்டுள்ளது. குணாதிசியத்தில் கவலியர் போல், சுதந்திரமானதன்மை மற்றும் நவீனம் விரும்பும் மக்களை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது" என்று கூறுகிறார், வடிவமைப்பு இயக்குனர் திரு.கில்ஸ் டெய்லர் அவர்கள்.*

*"ரோல்ஸ்-ராய்ஸ் மோட்டர் கர்களில், சமரசங்கள் இன்றி நாங்கள் வடிவமைப்புகளை மேற்கொள்ளோம் மற்றும் இப்புதிய சவாலை ஒவ்வொரு புதிய மோட்டார் காரிலும் மேற்கொள்வோம்" என்று தொடர்ந்து கூறிய டெய்லர் அவர்கள், "புதிய ரோல்ஸ்-ராய்ஸ் டானைப் பொறுத்தவரை, ஒரு துடிப்பான மற்றும் கவர்ந்திழுக்கும் தன்மை கொண்டதாக நாங்கள் அதை வடிவமைத்துள்ளோம்" என்று கூறினார்.*

பாரம்பரிய ரோல்ஸ்-ராய்ஸ் தோற்றம் மற்றும் கம்பீரத்துடன், அழகியல் வாய்ந்த வெளிப்புற வடிவமைப்புகள் வழியாக, புதிய ரோல்ஸ்-ராய்ஸ் டான், பார்ப்பவர்களை சுண்டியிழுக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. இதுநாள் வரையிலான சிறந்த ரோல்ஸ்-ராய்ஸாக இருக்கும் அதே நேரத்தில், அற்புதமான தரநிலைகளின் வழியாக, சிறந்த தன்மை நவீனம் மற்றும் ஒரு டிராப்ஹெட் கூப் - ன் அழகியல் மிகுந்த சமரசமற்ற சுதந்திர உணர்வை வழங்கும் சீரமைப்பினை இது கொண்டுள்ளது.

சுலபமான மற்றும் நீரான உணர்வுகளின் அனுபவத்தை, அற்புதமான மற்றும் சிறந்து விளங்கும் செயல்திறனுடன் இது வழங்குகிறது. இவை அனைத்தும், சொகுசு மற்றும் அமைவிட வசதியில் எத்தகயை சமரசமும் இன்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இப்புதிய ரோல்ஸ்-ராய்ஸ் துடிப்பான மற்றும் சமூக தன்மையைக் கொண்டுள்ளது, உலகம் முழுவதும் உள்ள பரந்துபட்ட, இளம் தலைமுறையினர் மற்றும் சமூக ரீதியில் அதிக விழிப்புணர்வு கொண்ட வாடிக்கையாளர்களை ஈர்க்கும்.

ஊடக எதிர்பார்ப்புகளுக்கு மாற்றாக, புதிய ரோல்ஸ்-ராய்ஸ் டான் ரெய்த் டிராப்ஹெட் கிடையாது. புதிய டானின் 80 சதவிகித வெளிப்புற பாடி பேனல்கள், வளர்ந்து வரும் ரோல்ஸ்-ராய்ஸ் வடிவமைப்பு மொழியை வெளிப்படுத்தும் வகையிலும் மற்றும் உயர் நவீனம் கொண்ட நான்கு-இருக்கைகள் சூப்பர் லக்சுரி டிராப்ஹெட் கட்டமைப்பினை வெளிப்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் இலக்கு தெளிவானதாகும். மற்ற எந்தவொரு கார் உற்பத்தியாளரும் இதுவரை சாதித்திராக அம்சங்களைக் கொண்டு, ஒரு அழகான் மேற்கூரையுடன் கூடிய காரை உருவாக்குவதே ஆகும். இதனால், வடிவமைப்பு குழுவினரின் ஓய்வற்ற உழைப்பின் பலனாக, ரோல்ஸ்-ராய்ஸ் டான் ஒரு காரில், இரண்டு வேறுபட்ட கார்களின் தோற்றத்தைக் கொண்டுள்ளவாறு உருவாகியுள்ளன என்று கூறினால், அது மிகையாகாது.

**வெளிப்புற வடிவமைப்பு**

ரோல்ஸ்-ராய்ஸ் டான், பாரம்பரிய ரோல்ஸ்ராய்ஸ் வடிவமைப்புக் கொள்கைகளைக் கொண்டுள்ளது – 2:1 விகித சக்கர உயரம் மற்றும் பாடி உயரம், ஒரு நீண்ட பானெட்,

குறுகலான முன்பக்க ஓவர்ஹேங், நீண்ட பின்பக்க ஓவர் ஹேங்க், அழகியல் மிகுந்த பனிபுற கிரா.ஃ.பிக் மற்றும் உயரமான ஷோல்டர் லைனைக் கொண்டுள்ளது.

இப்பாரம்பரியம் அனைத்து ஒரு அழகான மற்றும் முற்றிலும் நவீன வடிவமைப்பில் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு தடகள வீரரைப்போல், ரோல்ஸ்-ராய்ஸ் டான், கம்பீரமாகவும், துடிப்பாகவும் மற்றும் ஓடத்தயாராகவும் திகழும் வகையிலான தோற்றத்தைக் கொண்டுள்ளது. மேற்பரப்புகளில் உள்ள லேடன்ட் ஆக்சிலரேஷன் மற்றும் டென்ஷன், புதிய பேனல்களின் வழியாக அதிகரிக்கப்பட்டு, எவினன்ஸ் கர்வேச்சர், திடமான மேற்பறப்பினையும் மற்றும் அதிக ஆற்றல் வாய்ந்த சில்லவுட்டையும் உள்ளுக்குள் உள்ளதற்கு குறிப்பாக வெளிப்படுத்துகிறது.

டானின் சக்திவாய்ந்த மற்றும் கம்பீரமான முன் பக்கம், அழகான மற்றும் நவீன தன்மையுடன், ஆண்மைமிகுநத தோற்றத்தையும் வழங்குகிறது. பின்பக்க வீல்களை நோக்கி நகரும் போல்ட் ஸ்வீப்பிங் ஷோல்டர் லைன் அதிக அகலாம் டிராக்கை வெளிப்படுத்துகிறது. பானெட்டில் உள்ள டேப்பர்டு செய்யப்பட்ட “வேக் சேணல்” இறக்கைகளின் உத்வேகத்தை வெளிப்படத்தும் வகையில், ஜெட்டின் வேப்பர் டிரையலை மனதில் தூண்டுவது காரின் தன்மையை அடிக்கோட்டிட்டுக் காட்டுகிறது. இந்த உயரமான ஷோல்டர் லைன், பெரிய அளவிலான C-பில்லர் மற்றும் குறுக்குவாட்டு ரீதியில் அமைந்த விண்டோ அபெர்ச்சர், பக்கவாட்டிலிருந்தும், ரூ.ஃ.ப் ஏறிய நிலையிலும் காருக்கு ஒரு லோ-ஸ்லங் “ஹாட்-ராட்” தோற்றத்தினை அளிக்கிறது.

கிரில்லின் முன்பக்கம் தோராயமான 45 மிமீ கொண்ட பம்பர் ரெய்த் - ன் 53 மிமீ பம்பருடன் ஒப்பிடுகையில், குறுகலானதாகவும் மற்றும் கச்சிதமானதாகம் திகழ்கிறது. ஜெட் ஏர் இன்டேக் பிளேஸின் பார்வை கூர்நோக்கத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ள இந்த கிரில் வடிவமைப்பு, ரியர் ஷோல்டர்களை நோக்கி, காரின் டென்ஷனை கடத்துவது, டானின் தனித்துவமிக்க அழகினை மீண்டும் ஒரு முறை வெளிப்படுத்துகிறது.

ரோல்ஸ்-ராய்ஸ் குடும்பத்தின் பிற மாடல்களைப் போலல், பாரம்பரிய செங்குத்து கோடுகளின் மீது கூர்நோக்கம் கொண்டிராமல், கிரில் மற்றும் பம்பர், காரின் கிடைமட்ட லைன்களின் மீது கூர்நோக்கம் கொண்டுள்ளது. பம்பரில் இப்பொழுது ஒரு புதிய நம்பர் பிளேட் மற்றும் அதிகம் கூர்நோக்கம் கொண்ட கீழ்மட்ட ஏர் டேம் அமைந்துள்ளது. லோயர் வேலென்ஸிலுள்ள மெஷ் இடைவெளியுடன் கருப்பு வண்ணத்தில் வழங்கப்பட்டுள்ளது, ஆழமான தோற்றத்தினை கிரில்லுக்கு உண்டாக்குகிறத. மேலும், குரோம் “பிளேடுகள்” கிடைமட்ட லைன்களை மேம்படுத்தும் அதே நேரத்தில், கண்களின் போக்கிற்கு காரைச்சுற்றி உதவுவதன் வழியாக, ஆற்றல் மற்றும் அகலத்தின் தோற்றம் அதிகரிக்கிறது.

பக்கவாட்டில் ரோல்ஸ்-ராய்ஸ் டானைப் பார்வையிடுகையில், ஒருவரது பார்வை நிச்சயம் அதன் அழகியல் விபரக்குறிப்புகளையே அடையும். பிற உற்பத்தியாளர்களின் சா.ஃ.ப்ட் டாப்ஸ்ஸில் காணப்படும் அசிங்கமான கான்கேவ் பகுதிகள் அல்லது கூர்மையான ஸ்ட்ரட்கள் இன்றி, சீரானதாகவும் மற்றும் மென்மையானதாகவும் சா.ஃ.ப்ட் டாப் வடிவம் அமைந்துள்ளது. கூடுதலாக, புதிய 21 இன்சு பாலிஷ்டு மற்றும் 21” மற்றும் 20” பெயிண்டட் சக்கரங்கள், டான் தொடர்ந்து சிறப்பான அழகியல் தோற்றத்தினை, ரோல்ஸ்-ராய்ஸ் சொகுசுடன் வழங்குவதை உறுதி செய்கிறது.

காரின் பின்புறம் சற்று வீங்கியவாறும் இறுதியில் செல்கையில் சுருங்குமாறும் பெண்மைதன்மையுடன் கூடிய இடுப்பினை “டான்” கொண்டுள்ளது ஆரம்பகட்ட “போட் டெயில்” ரோல்ஸ்-ராய்ஸ் தன்மையை, 20 – ம் நூற்றாண்டு அழகியலை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது.

Rolls-Royce Motor Cars

The Drive, Westhampnett, Chichester, West Sussex PO18 0SH
Telephone +44 (0)1243 384000
www.press.rolls-roycemotorcars.com

சா.ஃ.ப்ட் டாப்பின் மென்மையான கீழிறங்கள் தன்மை ரோல்ஸ்-ராய்ஸ் டானிற்கு ஒரு முழுமையான டான் மொமெண்ட்டை அளிக்கிறது. ஒரு நாயகனின் தோற்றத்தை வழங்கும் வகையிலான மிட்நைட் சபையர் வெளிப்புறம் மற்றும் மேன்டரின் லெதர் உட்புறம் இணைந்து, இரவினை பகலாக்கும் சன்சைன் பர்ஸ்.ஃ.போர்த் உள்ளிருந்த வெளியாகி, சமூக வகையினத்தில், பரந்துபட்ட வாய்ப்புகளை வழங்குகிறது.

கூறை கீழ்பட்ட நிலையில், ரோல்ஸ்-ராய்ஸ் டானின் அழகு இன்னும் அதிகமாகிறது. பக்கவாட்டிலிருந்து ஆழமாக அமைந்துள்ள விண்ட்ஸ்கிரீன், ரியர் ஹான்சுகள் வரை பயணிக்கும் ஸ்வாக் லைன்கள் மற்றும் உயர் பெல்ட்லைன் இணைந்த புரொ.ஃ.பைல், சுலபமான துடிப்புத்தன்மையை வெளிப்படுத்துகிறது. பின்பக்க பயணிகள் கேபினிலிருந்து ஜாக்கெட்டின் காலர் மேலிழிக்கப்பட்டு, கழுத்தை பாதுகாக்கும் வகையில் அமைந்துள்ளது.

கேபினைச் சுற்றியமைந்துள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் வெயில்ட் லைன் .ஃ.பினிஷர் டெக்கினை உட்கொண்டுள்ளவாறு மூடப்படுகையில் சா.ஃ.ப்ட் டாப்பினை கொண்டு, உயர்-நிலை பிரேக் லைட் உடன் இணைகிறது. இந்த அழகான உலோகப்பணி, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கதவு கைப்பிடிகள், பாலிஷ் செய்யப்பட்ட சக்கரங்கள், பார்வையில் படும் எக்சாஸ்ட் மற்றும் முன்பக்க மற்றும் பின் பக்க பம்பர் அணிகலன்கள், ஒரு விலைமதிப்பற்ற தோற்றம் மற்றும் உணர்வை அளிக்கிறது.

நவீன கலைஞர்களின் அற்புதமான படைப்பாக டெக் திகழ்கிறது. ஓப்பன் போர் கனடல் பேணலிங்கில் மூடப்பட்ட இது, குதிரைலாடம் வடிவிலான பிக்பக்க கேபினையொட்டி அமைந்துள்ளது, குட்வுட்டிலுள்ள ரோல்ஸ்-ராய்ஸ் பிறப்பிடத்தின் வுட்ஷாப் கலைஞர்களின் அற்புதமான திறன்களை வெளிப்படுத்தும் வகையிலான மர இழைப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர்களால் அவர்களது தனிப்பட்ட விருப்பத்திற்கேற்ப தேர்ந்தெடுக்கப்படும் உட் ஆண் தி டெக், பிக் இருக்கைகளுக்கிடையில் “வாட்டர்.ஃ.பால்” போல் தோன்றும் மற்றும் கேபின் குளோத்திங் மற்றும் உட்புற டோர் பேணல்களைச் சுற்றி, டானில் நுழைய உரிமையாளரைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது.

**உள்ளலங்கார வடிவமைப்பு**

மீண்டும் ஒரு முறை, ரோல்ஸ்-ராய்ஸின் தனித்துவமிக்க கோச் கதவுகள் அதன் சொந்த டிராப்ஹெட் வடிவில் வந்துள்ளது. அவை அற்புதமாகவும் மற்றும் அழகாகவும் திகழ்வது குறிப்பிடத்தக்கது. நீளமான முன்பக்க விங்ஸ்கள் மற்றும் ரிலாக்ஸ்டு வா.ஃ.ப்ட் லைன், ஒரு நீண்ட பாடி புரொ.ஃ.பைல் மற்றும் ஒரு கொசெட்டட் கேபினை உருவாக்குகிறது.

பாரம்பரிய ஸ்போர்ட்ஸ் கார் தோற்றத்தினை வழங்கும் வகையில், டானின் சொகுசுதன்மைக்கு ஏற்ப, வாகனத்திற்குள் ஏறும் மற்றும் இறங்கும் முறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதனால் பின்பக்க பயணிகள் வெறும் வெளியேறுதலை மேற்கொள்ளாமல், ரோல்ஸ்-ராய்ஸ் டானில் நின்றபடி ரிவா மோட்டார் லான்ச், கவர்ச்சிகமான மொனாக்கோ பிரைவேட் ஜெட்டி அல்லது லேக் கோமோவில் காட்சியளிப்பது போல் செய்யலாம்.

எனினும் ரோல்ஸ்-ராய்ஸ் - ன் பிரத்தியேகமான மற்றும் அடிப்படை செயல்பாடான அணுகுவழியாகவும் இந்த கோச் டோர்கள் திகழ்கின்றன. இடையீடு அற்ற A-பில்லரின் கட்டுமானத்திற்கு உதவும் வகையில், பாடியின் ஒட்டுமொத்த வலிமை மற்றும் உறுதித்தன்மைக்கு இவையும் பொறுப்பாக உள்ளன.

டானில் நுழைகையில் தோன்றும் முதல் தோற்றம் நான்கு தனிப்பட்ட பக்கெட் சீட்கள், அபரிமிதமான அழகியல் கொண்ட ஸ்லிங்ஷாட் மரம் மற்றும் லெதர் அமைப்புகளுடன் கண்களைக் கவரும் வகையில் திகழ்கிறது. ஓட்டுனரின் A-போஸ்ட் முதல், காரின் பின்பக்கம்

வரை செல்லும் ஸ்லிங்ஷாட் கருத்தாக்கம், பின்பக்க சீட்களைச் சுற்றி, பேஸன்ஜர் A-பில்லரில் நிறைவடைகின்றன.

பார்கெட்டா போன்ற தோற்றம் கொண்ட ஸ்லிங்ஷாட் வடிவமைப்பு, காரின் பயணிகளை ஒருங்கிணைந்து முன்செல்லும் தன்மையை வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வடிவமைப்பு, காரின் வெளிப்புற பகுதியில் காணப்படும் ஆக்சிலரேட்டட் இழுநிழலக்க ஏதுவாகவும், உள்ளலங்காரம் வெளிப்புறத்தின் பாதுகாப்பு மற்றும் கம்பீரத்திற்கு ஏதுவாகவும் திகழ்கிறது.

ரோல்ஸ்-ராய்ஸ் டான் நான்கு தனிப்பட்ட கொசெட்டிங் இருக்கைகளைக் கொண்டுள்ளது. இந்த வாகனம் ஒரு முழுமையான நான்கு இருக்கைக் கொண்ட வாகனமாகத் திகழ்வதால் எங்கு அமர்ந்தாலும் எத்தகைய சமரசமும் இன்றி சிறப்பான சொகுசினை உணர முடியும். இந்த இருக்கைகள் காரின் துடிப்பான தன்மை மற்றும் அழகியலை வெளிப்படுத்துவதுடன், முழு நீள மைய கன்சோலைக் கொண்டுள்ளது பயன்பாட்டிற்கும் பேருதவியாகத் திகழும். அப்பர் சீட் பேக் கொண்டுள்ள பெல்ட் ஹார்னெஸ் பில்லர்லெஸ் பாடிவொர்க்கை மேம்படுத்தி, மரம் மற்றும் லெதரில், இடைவெளிகள் இன்றி ஃபுளோ-லைன்களை உருவாக்குகிறது. டிரேக்களின் மீதுள்ள மர மேற்பரப்புகள் செவ்ரான் முறையில், துடிப்பானதொரு தன்மையை வெளிக்காட்டும் வகையில், பொருத்தமாக உருவாக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட முறையிலான பாலிஷ் செய்யப்பட்ட மெட்டல் சேப்லெட்களை சுற்றிக் கொண்டுள்ள இன்ஸ்ட்ருமெண்ட் டயல்களும், ஒவ்வொரு இன்ஸ்ட்ருமெண்ட் இடையிலும் ஒரு "ஃபுளோட்" மேட் கிரோம் இடம்பெற்றுள்ளதன் வழியாக, கைகளால் உருவாக்கப்பட்ட சொகுசு ரிஸ்ட் வாட்சுகள் போன்ற தோற்றத்தை அளிக்கிறது. கூடுதலாக, மோட்டார் காரின் பெயரைக் கொண்டதொரு ஒரு புதிய கடிகார வடிவமைப்பு, அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

## பொறியியல் & தொழில்நுட்பம்

### தி சைலண்ட் பாலே

புதிய மேற்கூரையே, புதிய ரோல்ஸ்-ராய்ஸ் டான் - ன் பொறியியல் முக்கிய அம்சம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஒரு உண்மையான ரோல்ஸ்-ராய்ஸாகத் திகழ, அனைத்து ரோல்ஸ்-ராய்ஸ்களுக்கும் உரித்தான அமைதியான பயண அனுபவத்தினை டான் வழங்க வேண்டும். அதே நேரம், அழகியல், தோற்றம் மற்றும் பிராண்ட் பொருந்துநிலை ஆகியவைகளின் அடிப்படையில், ஃபேப்ரிக் மேற்கூரையே சரியான தேர்வாகும். இரவில், மழை பெய்யும் வேளையில், சொட்டும் நீரின் சத்தத்தை கேட்டபடி பயணிப்பதை விட சில காதல் ததும்பும் நேரம் ஏதுமில்லை. வாடிக்கையாளர்களுடனான பேச்சுவார்த்தைகளிலும் ரோல்ஸ்-ராய்ஸ் இதையே உணர்ந்தது.

ஃபேப்ரிக் ரூஃப் அமைப்பில் பணியாற்றுகையில், ரோல்ஸ்-ராய்ஸ் பொறியியல் வல்லுனர்கள், உலகளிலேயே மிகவும் அமைதியான கன்வெர்டிபிள் காரை உருவாக்க வேண்டுமென்றும் சமரசமற்ற சவாலை நிர்ணயித்துக் கொண்டனர். புதிய மேற்கூரையின் அனைத்து அம்சங்களிலும், அமைதிக்கான வேட்கை அமலபடுத்தப்பட, ஒரு புத்தம் புதிய மோட்டார் கார் உதயமானது.

முதலில், பயணிகள் பயணிக்கும் போது மேற்கொள்ளும் ரூஃப் அப் மற்றும் ரூஃப் டவுன் செயல்பாடுகள் அசல் ரோல்ஸ்-ராய்ஸ் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய ரூஃபின் வடிவமைப்பு, அழகானதாகவும், ஒயிலானதாகவும் மற்றும் உணர்வுமிகுந்ததாகவும் திகழும் அதே வேளையில், கன்வெர்டிபிள் காரில் பொருத்தத்தக்க மிகப்பெரிய கனோபியாகவும் இருக்க வேண்டும்.

Rolls-Royce Motor Cars

The Drive, Westhampnett, Chichester, West Sussex PO18 0SH
Telephone +44 (0)1243 384000
www.press.rolls-roycemotorcars.com

இதன் முக்கிய அம்சம், கனோபி எவ்வாறு பின் பக்க இருக்கைகளைச் சுற்றியும் மற்றும் விண்டோ டாப்ஸ் - ன் மீதும் அமர்கிறது என்பதாகும். இது டானின் ரூ.ஃப்லைனை குறிப்பிடத்தக்க அளவு குறைக்கத்தக்க கீழாக தொங்கும் தன்மையையும் கொண்டிருக்க வேண்டும்.

மற்றொரு முக்கிய அம்சம், பின்பக்க கண்ணாடியின் சிறிய அளவு - இது, கவனமாக பரிசீலிக்கப்பட்டு, ரூ.ஃப் அப் நிலையில் ஒரு தனிமையான அனுபவத்தை வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டது.

ரூ.ஃப் அழகாக மட்டுமின்றி, சிறப்பான வடிவிலும் இருப்பதை உறுதி செய்யும் வகையில் இரண்டு முக்கிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டன. இது காரின் செயல்பாடுகளின் போதான அமைதிக்கும் வழிவகுத்தது. மிக மென்மையானதொரு மேற்பரப்பில், புத்தாக்கத்துடன் "ஃபிரென்சு ஸீம்" முறையில் தைக்கப்பட மேற்கூரை காரின் மீதான காற்றுப் போக்கினை உறுதி செய்ததுடன், எத்தகைய காற்றோசையும் கேட்காததையும் உறுதி செய்தது. உள்ளுக்குள் ரோல்ஸ்-ராய்ஸ் ரெய்த் போன்றதொரு அமைதி, கன்வெர்டிபிள் மோட்டாரிங்கில் முதல் முறையாக உருவாக்கப்பட்டது.

இரண்டாவதாக, ரூ.ஃபின் திறப்பு மற்றும் மூடுதல் செயல்பாடு, அழகானதாகவும் மற்றும் இடையீடுகள் அற்றதாகவும் இருக்க வேண்டும். இத்தகையதொரு தன்மைக்காக, பொறியியல் அணியனர் ஒரு சொற்றொடரையே உருவாக்கினர். அதுவே, தி சைலண்ட் பேலே.

சைலண்ட் பேலேவை அவர்கள் சாதித்தனர்.

வெறும் 22 வினாடிகளில், 50km/h வரையிலான வேகத்திலும் இயங்கும் தன்மை கொண்ட இந்த "சைலண்ட் பேலே" வெளிப்புற உலகின் ஒலி, ஒளி மற்றும் வாசனைகளை காருக்குள் இருக்கும் உலகிற்கு கொண்டு வரவும் மற்றும் அவற்றிலிருந்து முற்றிலுமாக துண்டிக்கவும் முடியும். டானின் ஏர்லாக் திறப்பினை தூக்குவது வெளிப்புற உலகிற்கான திறவுகோலாகம் மற்றும் உரிமையாளரின் கார் புழக்கத்திற்கான பரந்துபட்ட வசதியையும் சாத்தியமாக்குகிறது.

**பிஸ்போக் ஆடியோ**

அமைதி எங்களுக்கு முக்கியமில்லை, இசை மற்றும் பொழுதுபோக்கினை நண்பர்களுடன் பகிர்வதே எங்களுக்கு முக்கியம் எனக்கூறம் நபர்களுக்காக, ரோல்ஸ் ராய்ஸ் - ன் பிஸ்போன் ஆடியோ அமைப்பு, ரோல்ஸ்-ராய்ஸ் டானின் தனித்துவமிக்க அமைப்பிற்கு ஏற்றவாறு பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது. ரோல்ஸ்-ராய்ஸ் ஆடியோ பொறியியலாளர்களின் நிபுணத்துவத்தில், இதுநாள் வரை உருவாக்கப்பட்டதிலேயே மிகச்சிறந்த வடிவமைப்பு கொண்ட ஆட்டோமோட்டிவ் ஹை-ஃபை அமைப்பு உருவாக்கப்பட்டது மற்றும் டானின் இரண்டு தோற்றங்களுக்கும் ஏற்றவாறு துல்லியமாக கட்டமைக்கப்பட்டது.

ரூ.ஃப் திறந்திருந்தாலும் அல்லது மூடியிருந்தாலும், பிஸ்போக் ஆடியோ சிறந்த அகஸ்டிக் சமநிலை மற்றும் செயல்திறனை உறுதி செய்கிறது. ஆட்டோமோட்டிவ் உலகில் இல்லாததொரு முறையாக, காரின் வடிவமைப்பு செயல்முறைகள் அனைத்திலும் ஆடியோ பொறியியலாளர்களும் பங்கேற்றதன் வழியாக, ஆடியோ அமைப்பு சிறந்து விளங்குகிறது.

பதினாறு பிரத்தியேகமாக டியூன் செய்யப்பட்ட ஸ்பீக்கர்களுடன், தியேட்டர் மற்றும் ஸ்டூடியோ செட்டிங்ஸ் இரண்டும் இணைந்துள்ளது, "நேரில் காண்பதை விட நிஜமான" உணர்வை வழங்குகிறது. பூட்டில் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு பேஸ் ஸ்பீக்கர்களும் மற்றும் கேபின் முழுவதும் ஏழு டுவீட்டர்களும் பொருத்தப்பட்டுள்ளன. இந்த அமைப்பு உயர்திறன் கொண்ட மைக்ரோஃபோன் வழியாக, வெளிப்புற இரைச்சலை கண்காணித்து அதற்கேற்றவாறு வால்யூம் மற்றும் டோன் அமைப்புகளை அட்ஜெஸ்ட் செய்து, சீரான செயல்திறன் வெளிப்படுவதை உறுதி

செய்கிறது. இத்துடன், தனிப்பட்ட ஸ்பீக்கர்களுக்கான ஃப்ரீகுவென்ஸி மற்றும் ஃபேஸ் கரெக்ஷன்கள் அதிக இறைச்சல் மற்றும் டெட் ஸ்பாட்ஸ்கள் வெளிப்புற தாக்கங்களின் வழியாக நேராது பாதுகாக்கிறது.

**ஓப்பன்-டாப் மோட்டாரிங்கில் ஒரு புதிய உதயம்**

சாஃப்ட்-டாப் கார்களில், ரோல்ஸ்-ராய்ஸ் குழுவினர் மேற்கொண்டுள்ள புரட்சிகரமான பொறியியல் சாதனைகளுக்கு கூடுதலாக, புதிய ரோல்ஸ்-ராய்ஸ் டான் பல்வேறு பிற கட்டமைந்த பொறியியல் புத்தாக்கங்களையும் அறிமுகம் செய்துள்ளது.

குறைவான எடையைக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், பாடி முழுவதும் உயர் அளவு டார்ஷனல் உறுதித்தன்மையைக் கொண்டுள்ளவாறு கன்வெர்டிபிள் வடிவமைப்பில் உள்ள பெரும் சவாலாகும். பெரும்பாலான கன்வெர்டிபிள் கார்களில் உள்ள ஸ்கட்டில் ஷேக்கைக் குறைக்க முக்கியத் தேவை, டார்ஷனல் உறுதித்தன்மையாகும் மற்றும் இது காரின் டைனமிக் கம்போஸரை பராமரிக்க உதவுகிறது.

பொறிறியல் அணி முழு திருப்தியை எட்டும் வரை, நீடித்த சோதனைகள் மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் நீள பயணங்கள் கடினமான சாலை மேற்பரப்புகளில் மேற்கொள்ளப்பட்டு சாத்தியமுள்ள பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்டன மற்றும் தீர்க்கப்பட்டன. இவற்றின் முடிவு இதுவரை கிடைக்கப்பெறும் நான்கு இருக்கைகள் கொண்ட கன்வெர்டிபிள் மாடல்களிலேயே மிக உறுதியான சேசிஸ் கொண்ட வாகனமான ரோல்ஸ்-ராய்ஸ் டானை திகழச்செய்கிறது.

புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள சஸ்பென்ஷன் கான்ஃபிகரேஷன் அமைப்பு, இந்த ஓப்பன் டாப் மோட்டார் காரின், பாடி ஸ்டிஃப்னஸ் மற்றும் மாஸ் டிஸ்ட்டிரிப்யூஷன், உத்திவாதமான சொகுசினை வழங்கும் அட்டிமேட் குரூசிங் மற்றும் என்றும் எதிர்நோக்கப்படும் ரோல்ஸ்-ராய்ஸ் 'மந்திரக்கம்பள பயணம்' ஆகியவைகளை சாத்தியமாக்குகிறது.

முன்பக்கமும் மற்றும் பின்பக்கமும் உள்ள குறைவான ஏரோடைனமிக்ஸ் மற்றும் லோயர் சென்டர் ஆஃப் கிராவிட்டி ஆகியவைகளுடன், புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள ஏர் ஸ்பிரிங்குகள் மற்றும் ஆக்டிவ் ரோல் பார்கள் இணைந்து, இந்த சூப்பர் – லக்சுரி போல்வார்டியருக்கு அற்புதமான கையாளுதல் திறன்களை அளிக்கிறது.

டானிக் ஃபிளார்டு, சென்சஸ் ரியர் ஃபிளாங்குகுள் கோஸ் - ஐக் காட்டிலும் 24 மிமீ அதிக அகலத்துடன் அமைந்துள்ளது, டானிக்கு ஒரு கீழ்பட்ட, கச்சிதமான தோற்றத்தினை அளிக்கிறது. கூடுதலாக, காரின் அகலமான மையப்பகுதி அதன் ஈர்க்கும் தன்மையை அதிகரிப்பதோடு மட்டுமின்றி, வலிமையையும் வெளிப்படுத்தும் வகையில் அகலமான ஷோல்டர்ஸ் அண்டர்லைனைக் கொண்டு வாகனததின் வலிமையை உயர்த்தி, மேலும் 180 மிமீ குறுகலான வீல் பேஸை சாத்தியமாக்கியுள்ளது.

**ரோல்ஸ்-ராய்ஸ் டான் ஓட்டும் அனுபவத்தின் இதயம்**

எந்தவொரு ரோல்ஸ்-ராய்ஸ் மோட்டார் காரின், துடிக்கும் இதயமாகவும் மற்றும் ஆத்மாவாகவும் திகழ்வது, அதிதிறன் கொண்ட டுவின்-டர்போ 6.6 – லிட்டர் V12 பவர்டிரெய்ன் ஈகும். 563bhp அல்லது 420kW @ 5,250rpm மற்றும் ஒரு 780Nm அல்லது 575 lb ft @ 1,500rpm டார்க் ரேட்டிங் ஆகியவைகளின் வழியாக, டானின் ஓட்டுதல் அனுபவம் ஈடுஇணையற்றதாகும்.

மீடியம் திராட்டிலில் 30 சதவிகிதம் அளவிற்கு அதிக செயல்விளைவை வழங்கும் டைனமிக் ஆக்சிலரேட்டர் பெடல் மேப்பிங் வழியாக, இந்த அனுபவம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

Rolls-Royce Motor Cars

The Drive, Westhampnett, Chichester, West Sussex PO18 0SH
Telephone +44 (0)1243 384000
www.press.rolls-roycemotorcars.com

டான் ரோல்ஸ்-ராய்ஸின் வழக்கமான ஸ்டீயரிங் குணாதிசியங்களைக் கொண்டுள்ளதன் வழியாக, அற்புதமான டிரைவர் ஃபீட்பேக் வழங்கி, காரை ஓட்டுவதை சுலபமானதாகவும் மற்றும் துல்லியமானதாகவும் மாற்றும் அதே நேரத்தில், மேற்கூரை ஏறியிருந்தாலும் அல்லது இறங்கியிருந்தாலும், உயர் வேகத்திலும் சிறப்பான பாதுகாப்புணர்வை அளிக்கிறது.

இதன் விளைவே, புதிய டான், ரோல்ஸ்-ராய்ஸின், மிகுந்த ஆற்றல் மிக்க, முழுமையான நான்கு இருக்கைகள் கொண்ட, இதுநாள் வரை வெளியான மிகச்சிறந்த டிராப்ஹெட் மோட்டார் காராகத் திகழ்கிறது. இதற்கான முக்கியகாரணமாகத் திகழும் அதன் நவீன பொறியியல் தன்மை, இலகுவானதாகவும் மற்றும் சந்தையில் கிடைக்கப்பெறும் 2+2 கன்வெர்டிபிள் வழக்கமான சமரசம் செய்துகொள்ளும் எரிபொருள் சிக்கனத்திலும் சிறந்ததாகவும் திகழ்கிறது.

வாகனத்தின் பிடிமானம் 540மிமீ (20 இன்சுகள்) விட்டம் கொண்ட ரன்ஃபிளாட் டயர்கள் வழியாக வழங்கப்பட்டுள்ளது. இந்த டயர்கள், காற்றிறங்கிய நிலையிலும் குறைந்தபட்சம் 100மைல்கள் / 160கிமீ தூரம், 50mph / 80km/h வேகத்தில் டயரை மாற்றாமலேயே பயணிப்பதை சாத்தியமாக்குகிறது. டயரில் காற்று முழுமையாக இறங்கியிருப்பினும் இதன் கட்டுப்பாடு சிறப்பானதாகவே இருக்கும். 10-ஸ்போக் ரிம்களில் மவுண்ட் செய்யப்பட்ட 21” சக்கரங்களும் விருப்பத்தேர்வாக கிடைக்கப்பெறுகிறது. ரன்ஃபிளாட் டயர் தொழில்நுட்ப உள்ளடக்கம் காரணமாக, கூடுதல் வீல் மற்றும் ஜேக் கொண்டு செல்ல வேண்டியது தேவையற்றதாகத் திகழ்வது, கூடுதல் லக்கேஜ் இடவசதியை சாத்தியமாக்கியுள்ளது.

**சுலபமான ஓட்டுதலுக்கான விவேகமான தொழில்நுட்பம்**

ரோல்ஸ்-ராய்ஸ் குடும்பத்தின் அதிசிறந்த மோட்டார் கார்களில் பொதுவாகக் காணப்படும் வகையில், புதிய டான் மாடலும், அதிசிறந்த ஆட்டோமோட்டிவ் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது. ஓட்டுனர்களுக்கு சூப்பர்-லக்சுரியுடன் கூடிய சுலபமான அனுபவத்தை வழங்கும் வகையிலான விவேகமான தொழில்நுட்பங்களை டான் வழங்குகிறது. காரின் தொழில்நுட்ப செயல்பாடுகளின் முக்கிய அம்சமாக சாவி திகழ்கிறது. இதற்காக, எக்ஸ்டசி ரோட்டரி கண்ட்ரோலர் என்னும் ஒரு இன்ட்யூட்டிவ், ஒன்-டச் தீர்வினை வழங்குவது, பயணருக்கு ஊடகம் மற்றும் நேவிகேஷன் செயல்பாடுகளுக்கான சுலபமான அணுகுவசதியை அளிக்கிறது.

ஒரு சுலபமான ஸ்மார்ட்ஃபோன் செயல்பாட்டினைப் போல், நேவிகேஷன் இன்புட் அல்லது ஊடகத் தேடுதல்களுக்கான எழுத்துகளை மேற்பரப்பில் நேரடியாக எழுதலாம். ஸ்டியரிங் வீலில் வசதியாக அமைக்கப்பட்டுள்ள ஒன்-டச் அழைப்பு பட்டன் பயணர்கள் காரின் செயல்பாடுகளை எரிமையான குரல் ஆணைகளின் வழியாக மேற்கொள்வதை சாத்தியமாக்கியுள்ளது. இவ்விரண்டு வசதிகளும் அதிகப்படியான பட்டன்கள் தேவைப்பாட்டினை போக்கி, மிகச்சுலபமான பயன்பாட்டினை உறுதி செய்கிறது. உதாரணத்திற்கு, பட்டனை அழுத்தி “Navigate to St. Tropez” என்னும் ஆணையைக் கூறுவது, காரின் செயற்கைக்கோள் நேவிகேஷன் அமைப்பை தொடர்பு கொண்டு வேகமான சாத்தியமான பாதையை காண்பிக்கும்.

இந்த ஸ்பிரிட் ஆஃப் எக்ஸ்டசி ரோட்டரி கன்ட்ரோலர் கொண்டுள்ள டச்பேடு (ஓட்டுனர் மற்றும் பயணிகள் கண்களில் படுமளவிற்கு கைரேகைகளை பதியச் செய்யும் என்பதால், டச் ஸ்கிரீனுக்கு மாற்றாக வழங்கப்படுவது) வழியாக, விரலைக் கொண்டு எழுத்துகளை எழுதுவதும் மற்றும் குரோம் டயலை திருப்புவதன் வழியாக செயல்பாடுகள் மெனுவில் ஸ்குரோல் செய்வதும் மற்றும் கீழிறக்குவதன் வழியாக அதன் செயல்பாடுகளை தேர்ந்தெடுப்பதையும் மேற்கொள்ளலாம்.

இந்த அமைப்பு, ஆங்கிலம், லத்தீன் மற்றும் அரபி எழுத்துகளையும் மற்றும் மேன்டரின் மொழி எழுத்துகளையும் புரிந்துகொள்ளும்.

Rolls-Royce Motor Cars

The Drive, Westhampnett, Chichester, West Sussex PO18 0SH
Telephone +44 (0)1243 384000
www.press.rolls-roycemotorcars.com

தி ரோட்டரி கண்ட்ரோலரின் டச் பேட், “புல் மற்றும் பின்ச்” வசதிகளையும் கொண்டுள்ளது, ஸ்மார்ட் ஃபோன் செயல்பாட்டினை ஒத்த தன்மையை சாத்தியமாக்குகிறது. இது பயணர்கள் திரையிலுள்ள பகுதிகளை பின்பாயிண்ட் செய்து காட்டவோ அல்லது அவற்றை பெரிதாக்கவோ உதவுகிறது.

குறிப்பிடத்தக்க மல்டிமீடியா இடையீடுகள் மற்றும் நேவிகேஷன் அமைப்பின் தகவல்கள், புதிய 10.25 இன்சு உயர் தெளிவு கொண்ட திரையிட் காட்டப்படும் மற்றும் இதற்கான மென்பொருள் மற்றும் வன்பொருள் மாற்றங்கள் வேகமான தூர கணக்கீடுகளை சாத்தியமாக்கும். தானியங்கு குரூஸ் கண்ட்ரோல் அமைப்பு, தொடர் துல்லிய தூர மற்றும் வேக சரிசெய்தல்களை குறைத்து, நின்று செல்ல ஏதுவானதாக மாற்றுகிறது. ஓட்டுனரால், இதன் வழியாக, நகர போக்குவரத்தில் தன்னம்பிக்கையோடும் மற்றும் சிரான முறையிலும் அமைப்பினைக் கண்காணித்து, ஒரு புதிய சாலையில் அல்லது சறுக்கும் தன்மை கொண்ட சாலையில் நுழைதல் போன்ற போக்குவரத்து - பாங்குகளை அனுசரித்து பயணிக்க முடியும்.

முன்பக்க பம்பர் வேலன்ஸ் மற்றும் மைய மேல்நிலை விண்ட்ஸ்கிரீனில் முறையே அமைந்துள்ள ரேடார் மற்றும் கேமராவிற்கான - புதிய மென்பொருள், எமெர்ஜென்சி அழுத்தத்தினை எதிர்நோக்குவதற்காக பிரேக்குகளை முன்னமே தயார் செய்தல் போன்றவைகள் உட்பட்ட வேகமான அமைப்பு செயல் நேரங்களை அளிக்கிறது.

மோசமான சூழ்நிலை நேரும் பட்சத்தில், ஒரு மூடப்பட்ட ரோல் ஓவர் பாதுகாப்பினை பின்னால் இருந்து வெறும் சில நொடிகளில் செயலாற்றி உயிர்களைக் காக்கும். ஒரு ரேட்செட் அமைப்பு அதை உறுதியாக பிடிக்கும். இந்த ரோல்-ஓவர் பாதுகாப்பு அமைப்பு காரைச் சுற்றி ஒட்டுமொத்த விண்ட்ஸ்கிரீனுக்கும் மேற்கொள்ளப்படும்.

**செயற்கைக்கோள் உதவியுடன் கூடிய டிரான்ஸ்மிஷன்**

2013 – ம் ஆண்டு, ரெய்த் வழியாக, உலகளாவிய அளவில் அறிமுகம் செய்பட்ட செயற்கைக்ளோள் உதவியுடன் கூடிய டிரான்ஸ்மிஷன் என்னும் கூடுதல் வசதி, டான் மாடலின் சீரான டைனமிஸத்திற்கு மேலும் திறனை சேர்க்கிறது.

செயற்கைக்கோள் உதவியுடன் கூடிய டிரான்ஸ்மிஷன் GPS ஐ பயன்படுத்தி, ஓட்டுனர் காண்பதற்கு முன்பாக, சாலையின் மாற்றங்கள் மற்றும் பயண முறைகளை கணிக்கும் திறனைக் கொண்டுள்ளது.

இது அத்தகைய தகவலைப் பயன்படுத்தி, பொருத்தமான கியரை டானின் 8-வேக ZF கியர் பாக்ஸிலிருந்து தேர்ந்தெடுக்கும். இதற்கு, ரோல்ஸ்-ராய்ஸ் 6.6 லிட்டர் டுவின்-டர்போ V12 என்ஜினின் ஆற்றல் கிடைக்கப்பெறுவது, சீரான மற்றும் சுமூகமான பயண அனுபவத்தை சாத்தியமாக்குகிறது.

உதாரணத்திற்கு, ஒரு துல்லியமான வளைவு வருகையில், உங்களால் எப்படி அதற்குள் பயணிக்க முடியும் என்பதை கார் அனுமானிக்கும். ஓட்டுனர் ஆக்சிலேட்டரிலிருந்து காலை எடுக்கும் போது, அது குறைவான கியரில் அதிகபட்ச ஆற்றலை உறுதி செய்து, மூலையை கடப்பதை உறுதி செய்யும்.

செயற்கைக்கோள் உதவியுடன் கூடிய டிரான்ஸ்மிஷன் வசதி, அனைத்து டான் மாடல்களிலும் நிலையாக கிடைக்கப்பெறுகிறது

**அஸ்தமனத்திலிருந்து விடியும் வரை – ஒளிரும் தொழில்நுட்பம் காண்பிக்கும் பாதை**


The Drive, Westhampnett, Chichester, West Sussex PO18 0SH
Telephone +44 (0)1243 384000
www.press.rolls-roycemotorcars.com

மிக சமீபத்திய LED லைட்டிங் தொழில்நுட்ப மேம்பாடுகளும், ரோல்ஸ் ராய்ஸ் டானில் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த விளக்குகள் குறிப்பிடத்தக்க அளவில் அமலாக்க தொழில்நுட்பம் கொண்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. மின்னணு ரீதியில் கட்டுப்படுத்தப்படும் ரி.:.ப்லெக்டர்கள் சக்கரங்கள் திரும்பும் திசையை நோக்கி ஒளியைப் பாய்ச்சும் தன்மையைக் கொண்டுள்ளது.

கூடுதலாக, .:.புல்-பீம் முகப்பு விளக்குகளின் தானியங்கி டிப்பிங்காகது, புரட்சிகமான புதிய கிளார்-.:.ப்ரீ தொழில்நுட்பம் வழியாக மாற்றப்பட்டுள்ளது. இந்த விளக்கு குறிப்பிடத்தக்க வகையில் அமலாக்கத் தொழில்நுட்பம் வழியாக நிர்வகிக்கப்படுகிறது. மின்னணு ரீதியில் கட்டுப்படுத்தப்படும் ரி.:.ப்ளெக்டர்கள் சக்கரம் திரும்பும் தன்மைக்கு ஏற்ற திசையில் திரும்பி, கார்னரிங்கின் போது ஆழமான பார்வையை சாத்தியமாக்குகிறது மற்றும் இதன் ஒளிமயமான வெள்ளை விளக்கு சீரான மற்றும் பாதுகாப்பான மற்றும் சீரான பயணம் இருட்டான சாலைகளில் சாத்தியமாவதுடன், ஓட்டுனர் சோர்வடைவதும் குறைக்கப்படுகிறது.

இரவு-நேர பயண பாதுகாப்பு அம்சமானது, வெப்பமறிதல் தன்மையை பயன்படுத்தி, மானுட மற்றும் மிருக வெப்பத்தன்மைகளை கண்டறிந்து ஓட்டுனருக்கு சாத்தியமுள்ள அபாயம் குறித்து எச்சரிக்கை செய்யும் திறனைக் கொண்டுள்ளது.

**தொழில்நுட்ப அம்சங்கள்**

| | |
|---|---|
| **Dimensions** | |
| Vehicle length | 5285mm / 17.34ft |
| Vehicle width | 1947mm / 6.39ft |
| Vehicle height (unladen) | 1502mm / 4.93ft |
| Wheelbase | 3112mm / 10.21ft |
| Turning circle | 12.7m / 41.7ft |
| Boot Volume (DIN) | 244ltr - 295ltr / 8.6 ft3 - 10.4 ft3 |
| **Weight** | |
| Unladen Weight (DIN) | 2560kg / 5644lb |
| **Engine** | |
| Engine / cylinders / valves | V / 12 / 48 |
| Fuel management | Direct injection |
| Power output @ engine speed | 563bhp / 420kW / 570PS @ 5250rpm |
| Max torque @ engine speed | 780Nm / 575lb ft @ 1500rpm |
| Fuel type | 10:1 / Premium unleaded[1] |
| **Performance** | |
| Top speed | 250kmh / 155mph (governed) |
| Acceleration 0 - 100km/h | 4.9sec[2] |
| **Fuel Consumption** | |
| Urban | 21.4ltr / 100km / 13.2mpg (Imp.) |
| Extra urban | 9.8ltr / 100km / 28.8mpg (Imp.) |
| Combined consumption / range | 14.2ltr / 100km / 19.9mpg (Imp.) |
| $CO_2$ emissions | 330g/km |

இந்த எண்ணிக்கைகள் இறுதி மீள்பார்வைக்கு உரியதாகும்.

- முடிவுற்றது -

Rolls-Royce Motor Cars

The Drive, Westhampnett, Chichester, West Sussex PO18 0SH
Telephone +44 (0)1243 384000
www.press.rolls-roycemotorcars.com

**மேலும் தகவல்களுக்கு**

எங்களது அனைத்து செய்தி வெளியீடுகள் மற்றும் பிரஸ் கிட்ஸ்களையும், பரந்துபட்ட அளவில் உயர் தெளிவு தன்மையுடன் கூடிய, பதிவிறக்கம் செய்யத்தக்க புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகளையும் எங்களது மீடியா இணையதளமான PressClub – ல் பதிவிறக்கம் செய்யலாம். ரோல்ஸ்-ராய்ஸ் மோட்டார் கார்ஸ் தகவல் தொடர்பு அணியினரை Twitter பின்தொடரலாம்.

**செய்தி தொடர்பிற்கு:**

குட்வுட்

- **உலகளாவிய தொடர்புகள் இயக்குனர்**
  ரிச்சர்டு கார்டர் +44 (0) 1243 384060 richard.carter@rolls-roycemotorcars.com
- **உலகளாவிய நிறுவனத் தொடர்புகள்**
  ஆன்ட்ரு பால் +44 (0) 1243 384064 andrew.ball@rolls-roycemotorcars.com
- **உலகளாவிய தயாரிப்பு தொடர்புகள்**
  ஆன்ட்ரு போயல் +44 (0) 1243 384062 andrew.boyle@rolls-roycemotorcars.com
- **குளோபல் லைஃப்ஸ்டைல் கம்யூனிக்கேஷன்ஸ்**
  எம்மா ரிக்கெட் +44 (0) 1243 384061 emma.rickett@rolls-roycemotorcars.com

பிராந்தியம்

- **ஆசியா பசிபிக் - வடக்கு**
  ரோஸ்மெரி மிட்செல் +81 (0) 3 6259 8888 rosemary.mitchell@rolls-roycemotorcars.com
- **ஆசியா பசிபிக் - தெற்கு**
  ராணி ரம்யா +65 6838 9753 rani.ramaya@rolls-roycemotorcars.com
  ஹல் செருதின் +65 6838 9675 hal.serudin@rolls-roycemotorcars.com
- **சீனா**
  ஆண்ணா Xu + 86 1084558037 anna.xu@rolls-roycemotorcars.com
- **ஐரோப்பா – கிழக்கு**

  ஃபிராங்க் டைமான் +49 (0) 89 382 29581 frank.tiemann@rolls-roycemotorcars.com
- **ஐரோப்பா – மேற்கு**

  ரூத் ஹக்லென்பிராய்க் +49 (0) 89 382 60064 ruth.hucklenbroich@rolls-roycemotorcars.com
- **மத்திய கிழக்கு, ஆப்ரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா**

  ஜமால் அல் மவீத் +971 561717883 jamal.almawed@rolls-roycemotorcars.com
- **வட அமெரிக்கா**

  கெர்ரி ஸ்பான் +1 201 930 8308 gerry.spahn@rolls-roycemotorcarsna.com
- **யுகே மற்றும் ஸ்கேண்டிநேவியா**

  ஜேம்ஸ் வாரென் +44 (0)1243 384578 james.i.warren@rolls-roycemotorcars.com